# சுபீட்சம்

SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

தீங்கட்கிழமை 15.03.2021 supeedsam.com supeedsam@gmail.com







# பொதுபலசேனா தீவிரவாத அமைப்பு அல்ல

## அமைப்பினை தடை செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு துளியும் நான் உடன்படமாட்டேன்; அமைச்சர் சரத் வீரசேகர



( சி.அருள்நேசன்)

'பொதுபலசேனா தீவிரவாத அமைப்பு அல்ல' பொதுபலசேனா அமைப்பினை தடை செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு துளியும் நான் உடன்படமாட்டேன் அமைச்சர் சரத் வீரசேகர இணைய தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## நாங்கள் விரைவாக எங்களுடைய பகுதிகளை கட்டியெழுப்ப வேண்டிய பாரிய பொறுப்பில் இருக்கின்றோம்



(ரக்ஸனா)

நாங்கள் யாழ்ப்பாணத் தலைவர்களின் கதைகளை கேட்டு துப்பாக்கி ஏந்தி போராடினோம். எமது மாவட்டத்தின் இளைஞர்கள் பலர் மரணித்திருக்கின்றனர்.

02 ஆம் பக்கத்தில்...




மழையில் நனைந்தவாறு வீதியோரம் 12 வது நாளாக மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற உணவு தவிர்ப்பு போராட்டத்தின்போது கி.சேயோன் உட்பட பலர் கலந்துகொண்டதை படத்தில் காணலாம்.

### காத்தான்குடி ஆதார வைத்தியசாலையை

## மீண்டும் இயங்க வைக்க துரித நடவடிக்கை

### சுகாதார தொழிநுட்ப பிரிவின் பணிப்பாளர் குழு நேரடி விஜயம்



(ரக்ஸனா)

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் எல்லாப் பிரிவுகளையும் முழுமையாகஇயங்க

02 ஆம் பக்கத்தில்...

## பாரிய சீனி வரி மோசடியை அரசாங்கம் செய்துள்ளது

### ராவய அமைப்பு குற்றச்சாட்டு



( சி.அருள்நேசன்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் கோட்டாபய அல்லது பசில் ராஜபக்ஷ தரப்பினர் ஆட்சிக்கு வருவார்களா என்ற நிலைக்கு அப்பால், இவ்வாறு திருட்டு வேலைகளை செய்யுமாக இருந்தால் இவ்வரசாங்கத்திற்கு பின்னர் பிணையும் இல்லாமல் போகுமென சிங்கள ராவய அமைப்பின் தலைவர் சங்கைக்குரிய. அக்மீமன தயாரத்ன தேரர் கூறுகிறார். குறிப்பாக,

02 ஆம் பக்கத்தில்...

## போதைபொருள் வியாபாரிகள்; தகவல்களை வழங்க பொதுமக்கள் முன்வாருங்கள்

### பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரீஸ் கூளுரை

(சர்ஜுன் லாபீர்)

இன்று எமது சமூகத்தில் அதிகமான தாக்கத்தினை ஏற்படுத்திக் கொண்டு இருக்கும் போதைவஸ்து பாவனையும் அதனை விற்பனை செய்பவர்களையும் பொதுமக்கள் முன்வந்து

02 ஆம் பக்கத்தில்...

## சூடுபத்தின சேனைக்கு விஜயம் செய்த இராணுவத்தளபதி



கொவிட் 19 தொற்றினால் மரணித்த சடலங்களை நல்லடக்கம் செய்யும் ஓட்டமாவடி சூடுபத்தினசேனை பிதேசத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் அல் ஹாபில் நஸீர் அஹமட்,

02 ஆம் பக்கத்தில்...






## திருமலை மாவட்டத்தை பொருளாதார கேந்திர நிலையமாக அரசு மாற்றியமைக்கும்

### அமைச்சர் தினேஷ் குணவர்தன



( ஹஸ்பர் ஏ ஹலீம்)

வெளிநாட்டு உறவுகள் அமைச்சின் நான்காவது கொன்சியூலர் பிராந்திய அலுவலகம் நேற்று (13) திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண முதலமைச்சர் செயலக வளாகத்தில் வெளிநாட்டு உறவுகள் அமைச்சர்

02 ஆம் பக்கத்தில்...






## ஆயிரம் ரூபா உறுதிமொழி இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது

### இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு



(க.கிஷாந்தன்)

'நான் அரசியல் செய்யவில்லை. நிர்வாகத்தையே முன்னெடுக்கின்றேன். எனவே, மலையகத்தில் நிச்சயம் மாற்றத்தை

02 ஆம் பக்கத்தில்...







## மன்னார் விபத்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் பலி



மன்னார், மதவாச்சி பிரதான வீதி, சிறுநாவற்குளம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 1

02 ஆம் பக்கத்தில்...

## நள்ளிரவில் கிராமத்திற்குள் புகுந்த காட்டு யானைக் கூட்டம்



(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதியும், அம்பாறை மாவட்டத்திற்குட்பட்ட வைக்கியல்ல பிரதேசத்

02 ஆம் பக்கத்தில்...






(டினேஸ்)

திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கஞ்சிகுடியாறு, தங்கவேலாயுதபுரம், பாலக்குடா, காயத்திரி; கிராமம் பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் நேற்றைய தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசனுடன் சந்திப்பினை மேற்கொண்டு பிரதேச விடயங்கள் குறித்து கலந்துரையாடினர்.

## நள்ளிரவில் கிராமத்திற்குள் புகுந்த காட்டு...

திற்குள் ஞாயிற்றுக்கிழமை (14) அதிகாலை புகுந்த காட்டுயானைகள் அங்கிருந்த பயன்தரும் பல மரங்களையும், தோட்டங்களையும் அழித்துத் துவம்சம் செய்துள்ளதாக அப்பகுதி பிரதேச வாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சுமார் 2.00 மணியளவில் இவ்வாறு புகுந்த 3 இற்கு மேற்பட்ட காட்டுயானைக் கூட்டத்தினால் அக்கிராம மக்கள் மிகுந்த அல்லோல கல்லோலப்பட்டுள்ளனர். கிராமத்திற்குள் காட்டுயானைக்கூட்டம் புகுந்ததை அவதானித்த மக்கள் நள்ளிரவு வேளையில் மிகுந்த அச்சத்துடன் யானைக்கூட்டத்தை அப்புறப்படுத்த முயற்சி செய்துள்ளனர்.

எனினும் அங்கிருந்த பயன்தரும், தென்னை, வாழை, பலா, மா, மரவெள்ளி கமகு, உள்ளிட்ட பயிர்களை அழித்து துவம்சம் செய்துவிட்டு ஒருவாறு யானைக்கூட்டம் வெளியேறியுள்ளது.

மிக அண்மைக்காலமாக மட்டக்களப்பு, மற்றும் அம்பாறை மாவட்டங்களின் எல்லைப் புறங்களில் இவ்வாறு காட்டு யானைகளின் அட்டகாசங்களும், தொல்லைகளும் அதிகரித்த வண்ணமுள்ளன. இவ்வாறு எல்லைப் பகுதியில் நிலைகொண்டுள்ள காட்டுனைகளை பிடித்துக் கொண்டு சரணாலயங்களில் விட்டு விட்டு மீண்டும் யானைகள் கிராமங்களுக்குள் உட்புகாமலிருக்க யானைப் பாதுகாப்பு வேலிகளை அமைத்துத் தருமாறும் அப்பகுதி மக்கள் மிக நீண்டகாலமாகவிருந்து கோரிக்கை விடுத்து வருகின்றமையும், அம்மக்களின் கோரிக்கைகள் இன்றுவரை தீர்க்கப்படாமலிருந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## சூடுபத்தின சேனைக்கு விஜயம் செய்த இராணுவத்...

இராணுவ தளபதி சவேந்திர சில்வா மற்றும் இயக்குநர் மருத்துவ தொழில்நுட்ப சேவைகள் மற்றும் கோவிட் 19 நடவடிக்கைகளின் அமைச்சக ஒருங்கிணைப்பாளர் Dr. அன்வர் ஹம்தானி மாகாண சுகாதாரப்பணிப்பாளர் டாக்டர் அழகையா லதாகரன் ஆகியோர் நேற்று காலை சனிக்கிழமை ஓட்டமாவடி சூடுபத்தின சேனைக்கு சென்று பார்வையிட்டனர்.

இதேவேளைகோவிட் அடக்கம் தொடர்பான பிரச்சினை இப்போது தீர்க்கப்பட்டுள்ளது நாட்டின் பல்வேறு பகுதிகளில் வைக்கப்பட்டிருந்த 45 கொவிட்சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளது

இன்னும் ஓரிரு சடலங்களே புதைபடாமல் உள்ளது. அவை இன்று அல்லது நாளை அடக்கம் செய்யப்படும். சடலம் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஓட்டமாவடியில் அடக்கம் செய்யப்படும் என்று ராணுவத் தளபதி தெரிவித்தார்.

## பாரிய சீனி வரி மோசடியை அரசாங்கம் செய்துள்ளது...

ஒப்பந்த மற்றும் திருட்டு மோசடிகள் குறைந்த நிலையில், இவ்வரசாங்கமானது சீனிக்கான பாரிய வரி மோசடியை செய்துள்ளதெனவும் கூறியுள்ளார்.

அவர் செய்தியாளரிடம் மேலும் கூறுகையில், பல்வேறு ஒப்பந்த மோசடிகளில் மற்றும் கள்வர்களை கைது செய்வதாக கூறி ஆட்சிக்கு வந்த இவ்வரசாங்கம் அதற்கும் மேலாக தற்போது பாரிய திருட்டு மோசடியை செய்துள்ளதென அவர் கூறியுள்ளார்.

எனவே, அரசாங்கம் இவ்வாறு செயல்படுகின்ற நிலையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் யார் போட்டியிடுவார்கள் என்ற கேள்விக்கு மாறாக, அடுத்த தேர்தலில் பல பாராளுமன்ற ஆசனங்களை எவ்வாறு பெற்றுக் கொள்ளப் போகின்றது என்பது சிந்திக்க வேண்டிய விடயமாகும் என அவர் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்த கருத்துக்களை அவர் தெரிவித்துள்ளார்.

## காத்தான்குடி ஆதார வைத்தியசாலையை மீண்டும்...

வைக்கும் முகமாக சுகாதார தொழிநுட்ப பிரிவின் பணிப்பாளர் குழு நேரடி விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

பிரதேச மக்களின் நன்மை கருதி காத்தான்குடி ஆதார வைத்தியசாலையை அதன் வழமையான சிகிச்சைகளை நடத்திச் செல்ல ஏற்பாடுகளைச் செய்து தருமாறு காத்தான்குடி தள வைத்தியசாலை அபிவிருத்திக் குழுத் தலைவரும் அவ்வைத்தியசாலையின் அத்தியட்சகருமான வைத்தியர் எம்.எஸ்.எம். ஜாபிர் மட்டக்களப்பு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நஸீர் அஹமட்டின் கவனத்திற்கு கடந்த வியாழக்கிழமை கொண்டு வந்திருந்தார். அந்த வேண்டுகோளை நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்றதன் அடிப்படையில் சுகாதார அமைச்சின் தொழினுட்பக் குழுவினர் சனிக்கிழமை 13.03.2021 காத்தான்குடி ஆதார வைத்தியசாலைக்கு கள விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

இவ்வைத்தியசாலையை மீண்டும் இயங்க வைக்கும் முகமாக அதற்கான சாத்தியவள அறிக்கைய அடுத்து வரும் ஒரு வார காத்திற்குள் சமர்ப்பித்ததும் உடனடி நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57

## ஆயிரம் ரூபா உறுதிமொழி இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது...

ஏற்படுத்துவேன்.' என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் இயங்கும் தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்தினுடைய எதிர்கால செயற்பாடுகள் தொடர்பான சந்திப்பொன்று அட்டன் தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்தில் 14.03.2021 அன்று இடம்பெற்றது. இதன் போது திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சர் சீதா அறம்பேபொல அவர்கள் வருகை தந்திருந்தார்.

இதன் போது தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்தின் தற்போதைய மற்றும் கடந்த காலங்களில் இடம்பெற்ற செயற்பாடுகள் பற்றியும் மற்றும் மாணவர்களின் கற்கை நெறிகள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு;

'தேர்தல் விஞ்ஞாபனம் ஊடாக எமது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நாம் நிறைவேற்றி வருகின்றோம். அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுக்கப்படும் என உறுதியளித்தோம். அந்த உறுதிமொழி இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் அதிலும் சிலர் குறை காண்கின்றனர். தொழிலாளர்களுக்கான நலன்கள் இல்லாது போய்விடும் எனவும் விமர்சிக்கின்றனர். நாம் தொழிலாளர்களை பாதுகாப்போம். எனினும், சந்தா வாங்கும் சிலர் தொழிலாளர்கள் நலன் பற்றி சிந்திப்பதில்லை.

நுவரெலியா மாவட்டத்தில் மலையகத்துக்கான பல்கலைக்கழகம் அமையவுள்ளது. ஒரு வருடகாலப்பகுதியில் எம்மால் முக்கியமான சில விடயங்களை நிறைவேற்றமுடிந்தமை மகிழ்ச்சியளிக்கின்றது. மலையகத்தை மாற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. எமது இளைஞர்களும் நம்புகின்றனர். நாம் மக்களுக்குதான் பதிலளிக்க வேண்டாம். வீண் விமர்சனங்களை முன்வைப்பர்களுக்கு பதிலளிக்க வேண்டிய தேவை இல்லை என்றார்.

## மன்னார் விபத்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த...

மணியளவில் இடம் பெற்ற விபத்தில் இரு இளம் குடும்பஸ்தர்கள் உயிரிழந்துள்ளனர்.

குறித்த வீதியூடாக மோட்டார் சைக்கிளில் மன்னார் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்சிள் வீதியோரத்தில் நின்ற பனை மரத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

இருவரும் மன்னாரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகளை திருமணம் செய்த 36 மற்றும் 38 வயதுடையவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

## திருமலை மாவட்டத்தை பொருளாதார கேந்திர நிலையமாக அரசு...

தினேஷ் குணவர்தன அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை கிராமங்களுக்கும் கொண்டுசெல்லல் என்ற அரசாங்கத்தின் திட்டத்திற்கமைய மக்களுக்கு இலகுவான முறையில் சேவைகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் இப்பிராந்திய அலுவலகம் திறந்து வைக்கப்பட்டதாக இதன்போது வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தை பொருளாதார கேந்திர நிலையமாக மாற்றியமைத்து நாட்டினுடைய அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்கின்ற மாவட்டமாக மாற்றி அமைப்பதற்கான செயற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டுவருகின்றது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுடைய ஆட்சி காலத்தில் தான் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சராக இருந்த வேளையில் கந்தளாய் நீர்ப்பாசன திட்டத்தை ஆரம்பித்து திருகோணமலை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களுக்கும் குடிநீர் வழங்கும் செயற்பாடுகளை மேற்கொண்டதாகவும் அதன் மூலமாக இப்பிரதேச மக்களின் குடிநீர்ப் பிரச்சினை பாரியளவில் நிவர்த்தி செய்யப் பட்டதாக இதன்போது அமைச்சர் நினைவுபடுத்தினார்.

நாட்டை குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்குள் அபிவிருத்தியடைந்த தேசமாக மாற்றியமைப்பதற்கான முயற்சிகள் தற்போது அதிமேதகு ஜனாதிபதி தலைமையிலான ஆட்சியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அனைத்து மக்களும் இதற்காக ஒத்துழைப்பு வழங்குவது காலத்தின் தேவையாகும் என்றும் அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிராந்திய ஒத்துழைப்பு ராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழுவின் இணைத்தலைவருமாகிய கபில நுவன் அத்துகோரல, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ்.தௌபீக், இராசமாணிக்கம் சாணக்கியன்,யதாமணி குணவர்தன, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் கொலம்பகே, அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## போதைபொருள் வியாபாரிகள்; தகவல்களை வழுங்க பொதுமக்கள்...

தகவல்களை தெரிவிக்க வேண்டும் என திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவருமான எச்.எம்.எம் ஹரீஸ் தெரிவித்தார். நேற்றுதனது காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்... போதைவஸ்து வியாபாரமும் அதற்கு அடிபணிவர்களின் தொகையும் இன்று கூடிக் கொண்டு போகின்றது.

இது சம்மந்தமாக மாவட்டத்தின் பொறுப்பு வாய்ந்த மக்கள் பிரதிநிதி என்ற அடிப்படையில் அண்மைக்கால அம்பாறை மாவட்டத்தில் போதைபொருள் வியாபாரிகளின் ஊடுருவல் மிக தீவரமாக அதிகரித்துள்ளது.மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகள் என பெரிய ஒரு வலையமைப்பில் இந்த போதைப் பொருள் வியாபாரம் நடைபெற்று வருகின்றது. இதனால் பாடசாலை மாணவர்கள்,இளைஞர்கள் என இளம் சந்ததியினரே அதற்கு அடிமையாகி அவர்களை அழிவுப் பாதைக்கு கொண்டு செல்லுகின்ற அளவுக்கு நிலை மோசமாக காணப்படுகின்றது.

இது சம்மந்தமாக நான் போதைப் பொருள் ஒழிப்பு பொலிஸ் பிரிவு, கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்,இராணுவத்தினர் என பல்வேறுபட்ட தரப்பினரோடு இதனை ஒழித்து சம்மந்தப்பட்டவர்களை கைது செய்வ வேண்டும் என்று நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசி வந்து இருக்கின்றேன்.

இருந்தும் இந்த போதை பொருள் தடுப்பு நடவடிகை திருப்தியான முறையில் நடைபெறவில்லை என்பது எங்களுக்கு கவலையான விடயமாக இருந்து வருகின்றது.இது சம்மந்தமாக நான் கடந்த 11ம் திகதி வியாழக்கிழமை ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச எங்களது பாராளுமன்ற உறுப்பினர்களைஅழைத்து பேசுகின்ற போது அவரிடமும் அம்பாறை மாவட்டத்தில் போதைபொருள் விற்பனை மற்றும் பாவனையாளர்களின் தன்மை கட்டுகடங்காமல் தலைவிரித்து ஆடுகின்றது என்கின்ற விடயத்தை எடுத்து கூறி அம்பாறை மாவட்டத்தில் அதனை கட்டுப்படுத்துகின்ற தன்மை வெற்றிகரமாக நிறைவேற்றப்படவில்லை என்பதோடு நாட்டின் ஏனைய பகுதிகளில் அதனை கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கைகளை இங்கும் எடுக்க வேண்டும் என்கின்ற விடயத்தை தெளிவாக எடுத்து கூறினோம்.

## நாங்கள் விரைவாக எங்களுடைய பகுதிகளை கட்டியெழுப்ப...

அவர்களின் நோக்கம் கிழக்கிலே வாக்குகளை பெறுவதாகும். சாணக்கியன் போன்றவர்களை பயன்படுத்தி சுமந்திரன் வாக்குகளை பெறவேண்டும். தமிழரசுக்கட்சியின் செயலாளர் பதவியை சுமந்திரன் பெறுவதற்காக அவரை பயன்படுத்துவார். கட்சிக்குள் பலத்தினை கூட்டுவதற்கே பார்க்கின்றனர். என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கத்தின் வேலைத்திட்டங்களில் ஒன்றான ஐந்தாயிரம் கிராமிய பாலங்களை அமைக்கும் இதயங்களை ஒன்றிணைக்கும் ஊரின் பாலம் வேலைத்திட்டத்தின் தேசிய வேலைத்திட்டம் மட்டக்களப்பில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

கிராமத்தில் வாழும் மக்கள் தமது உற்பத்திப்பொருட்களை இலகுவில் கொண்டுசென்று சந்தைப்படுத்தவும்,மக்கள் எதிர்கொள்ளும் போக்குவரத்து பிரச்சினைகளை தீர்க்கும் வகையிலும் இந்த கிராமிய பாலங்கள் அமைக்கும் பணிகளை ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கத்தின் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் பிரதமரின் தலைமையில் இந்த பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கிழக்கு மாகாண பணிப்பாளரும், பொறியியலாளருமான திருமதி. கலைவாணி வன்னியசிங்கம், பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளரும்,சட்டத்தரணியுமான திருமதி. மங்களா சங்கர்,கட்சியின் செயலாளர் எஸ்.ஜெயராஜ்,பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்.

நாங்கள் விரைவாக எங்களுடைய பகுதிகளை கட்டியெழுப்பவேண்டிய பாரிய பொறுப்பில் இருக்கின்றோம். இந்த நாட்டின் கௌரவ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் சுபீட்சத்தின் நோக்கு என்ற வேலைத்திட்டத்தை முன்வைத்தார்.அதன் அடிப்படையில் தான் பலவிதமான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவர் ஆட்சியை பொறுப்பேற்று சிறிது காலத்திலேயே கொவிட் பிரச்சினை பூதாகரமாக எழுந்தது. கொவிட்19 ஆனது உலகளாவிய ரீதியிலும் இலங்கையிலும் தாக்கம் செலுத்தியதன் காரணமாக பாரியளவான பொருளாதார இழப்புகள் ஏற்பட்டன. இதற்கிடையிலும் அரசாங்கம் தனது பணிகளை சிறப்பாக செய்துகொண்டிருக்கின்றது.

ஒருஇலட்சம் வேலை வாய்ப்பு திட்டத்தில் வவுணதீவில் ஐம்பத்து ஐந்து பேருக்கு வேலை வழங்கியிருக்கின்றோம். ஆகவே சமுர்த்தி திட்டத்தில் ஐம்பத்து ஐந்து குடும்பங்கள் குறைக்கப்படும். போக்குவரத்து பிரச்சினை,குடிநீர் பிரச்சினை, மலசலகூடம் இல்லாத, பொதுவசதிகள் இல்லாத பிரச்சினைகள் வந்திருக்கின்றன. இருந்தாலும் நாங்கள் இதனை மாற்ற வேண்டும்.

இன்று சாணக்கியன் போன்ற தமிழ் அரசியல்வாதிகள் நடைமுறைக்கு சாத்தியமற்ற விடயங்களை பேசிவருகின்றனர். எந்தவொரு வேலைத்திட்டத்தினையும் தமிழ் மக்களுக்கு செய்யாமல்,வீதிகளை அமைத்து குளங்களை அமைத்து நீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதை விடுத்து அவன் வருகின்றான், இவன் வருகின்றான், விகாரைகளை அமைக்கின்றான் என்று கூறினால் என்ன மாற்றத்தை நீங்கள் ஏற்படுத்தப் போகின்றீர்கள்.நாங்கள் நடைமுறைக்கு சாத்தியமான விடயங்களையே சொல்கின்றோம்.நாங்கள் மாற வேண்டும் வேறு எவரதும் கால்களைப் பிடிக்கத் தேவையில்லை.

இன்று பல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டக்களப்பில் மதுபானசாலைகள் இருக்கின்றது.அதனை நாங்கள் இங்கு சொல்ல விரும்பவில்லை. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மக்கள் நலன் சார்ந்த மக்களை முன்னேற்றுகின்ற பலப்படுத்துகின்ற கட்சியாகும். எங்கள் வேலைத்திட்டம் மிகத் தெளிவானது.அடுத்தமுறை எமது மாவட்டத்திற்கு ஜனாதிபதி அவர்கள் வருவாரானால் தொழில் வாய்ப்பை பெருக்குவதற்கு, தொழிற்பேட்டைகளை அமைக்கலாமா,இங்கேயே 20ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பை வழங்கினால் வேறு ஊரிலிருந்து ஆட்களை எடுக்கலாமா,நாங்கள் முதலில் வவுணதீவு, கரடியனாறு போன்ற பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினையை நிவர்த்தி செய்வோம்.இதற்காக 400மில்லியன் ரூபா பணம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

நாங்கள் யாழ்ப்பாணத் தலைவர்களின் கதைகளை கேட்டு துப்பாக்கி ஏந்தி போராடினோம்.எமது மாவட்டத்தின் இளைஞர்கள் பலர் மரணித்திருக்கின்றனர். அவர்களின் நோக்கம் இங்கு வாக்குகளை பெறுவதாகும். சாணக்கியன் போன்றவர்களை பயன்படுத்தி சுமந்திரன் வாக்குகளை பெறவேண்டும். தமிழரசுக்கட்சியின் செயலாளர் பதவியை சுமந்திரன் பெறுவதற்காக அவரை பயன்படுத்துவார்.கட்சிக்குள் பலத்தினை கூட்டுவதற்கே பார்க்கின்றனர் எனத்தெரிவித்தார்.

## பொதுபலசேனா தீவிரவாத அமைப்பு அல்ல...

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்;

ஒருசில நிபந்தனைகளுக்கு நான் ஒரு போதும் ஒத்துப்போகமாட்டேன். தற்போது பொதுபலசேனா அமைப்பை தடை செய்ய வேண்டும் என்று கூறுகின்ற விடயத்திற்கு முழுமையாகவும், சிறிதளவேனும் உடன்படமாட்டேன். முழுமையாக அக்கருத்தை எதிர்க்கின்றேன். ஏனென்றால் பொதுபல சேனா அமைப்பு தீவிரவாத அமைப்பு அல்ல. இவர்கள் தான் இந்த நாட்டில் வஹாப்வாதம் பற்றி முதல்முதலாக கூறியவர்கள்.

மேலும் இந்த அமைப்பினர் ஹலால் பற்றி முதன்முதலாக குறிப்பிட்டதோடு இதன்மூலம் தீவிரவாத தரப்பினர் உருவாக நேரிடும் எனக் கூறியவர்கள் பொதுபலசேன அமைப்பே ஆகும். எனவே பொதுபலசேனா அமைப்புடன் கோபம் கொண்ட முஸ்லிம்கள் விகாரைகளைத்தான் தாக்க வேண்டும் இருந்தும் ஏன் கத்தோலிக்க ஆலயங்களை தாக்க வேண்டும் என குறிப்பிட்ட பேட்டியில் கேள்வியெழுப்பியுள்ளார்.



SwissLife
Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...



மருத்துவ காப்புறுதி



வாகனக் காப்புறுதி



குழந்தைகளுக்கான காப்புறுதி



ஆயுட் காப்புறுதி



சட்டக் காப்புறுதி



Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65



SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

Aaran Ayurveda
& Wellness Massage



Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

உதயகுமார் கல்வி நிலையம்



முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை

தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923

n.uthayakumar1981@gmail.com

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்

10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க

- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த

இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை
பள்ளித் தலைமனைத்தும்
பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# இன்று அரச பாடசாலைகள் மீண்டும் ஆரம்பம்



( வி.ரி.சகாதேவராஜா)

நாட்டிலுள்ள அரச பாடசாலைகள் க.பொ.த.சா.த பரீட்சை விடுமுறையின் பின்னர் மீண்டும் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவிருக்கின்றன.

நீண்டகாலத்திற்குப்பின்பு மேல் மாகாண பாடசாலைகளில் தரம் 05 ,11 மற்றும் 13 ஆம் தர வகுப்புகளும் இன்று ஆரம்பிக்கப்படும்.

அதேவேளை மேல் மாகாண பாடசாலைகளில் தரம் 05,11,13 ஆம் தரங்களை தவிர்ந்த ஏனைய தரவகுப்பு கல்வி நடவடிக்கைகள் ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

இதற்கமைவாக தரம் 1 தொடக்கம் தரம் 4 வரையிலும் தரம் 06 தொடக்கம் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் அன்றைய தினம் ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்தார்.

இன்று திறக்கப்படும் பாடசாலைகள் யாவும் சித்திரைப்புத்தாண்டு விடுமுறைக்காக ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி மூடப்படவிருப்பதாக கல்வியமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில சி பெரேரா அறிவித்துள்ளார்.

# காட்டு யானைகளின் அட்டகாசத்தால் பல சேதங்கள் விளைவிப்பு

(ஹஸ்பர் ஏ ஹலீம்)



திருகோணமலை மாவட்டம் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முத்து நகர் கிராமத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதால் பல்வேறு சேதங்கள் விளைவிக்கப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த முத்துநகர் கிராமமானது கண்டி திருகோணமலை பிரதான வீதியில் இருந்து சுமார் ஒன்றரை கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது இரவு நேரங்களில் நேற்று முன்தினம் இரவு புகுந்த காட்டு யானைகளின் அட்டகாசத்தால் தங்களது பயிர்ச்செய்கைகளை துவம்சம் செய்து விட்டு சென்றுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வாழை, பல,ா தென்னை, கரும்பு போன்ற பயிர்களை சேதப்படுத்தியுள்ளதாகவும் இதனால் இரவு நேரங்களில் நிம்மதியாக தூங்க முடியாதுள்ளதாகவும் தங்கள் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்புவதில் இருந்தும் அச்ச நிலை நிலவுவதாகவும் அம் மக்கள் மேலும் கவலை தெரிவிக்கின்றனர். குறித்த கிராமத்தில் அமைக்கப்பட்ட யானை வேலிகள் உடைந்து சீரற்ற நிலையில் உள்ளதனால் யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

பிரதான வீதியில் இருந்து உரிய கிராமத்துக்கு செல்லும் ஒன்றரை கிலோ மீற்றர் தூரம் செல்லும் பாதையின் வீதி மின் விளக்கின்மை காரணமாகவும் இரவு நேரங்களில் அச்சத்துடன் பயணிக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து யானை வேலிகளை துரிதமாக முறையாக அமைத்து தருமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மட்டக்களப்பு - ஏறாவூர் மிச்நகர் பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கொங்கிறீட் வீதி



(ஏறாவூர் நிருபர் - நாஸர்)

மட்டக்களப்பு - ஏறாவூர் மிச்நகர் பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டகொங்கிறீட் வீதி மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான நிகழ்வில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்எல்ஏஎம். ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

ஏறாவூர்ப் பற்று பிரதேச சபையின் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினராக இருந்த எஸ்எம். கமால்தீனின் கோரிக்கைக்கமைவாக இவ்வீதியை அமைப்பதற்காக பத்து இலட்சம் ரூபா நிதி சபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

இவ்வீதி திறப்பு நிகழ்வினையடுத்து வீதியோரம் மரக்கன்றுகள் நடப்பபட்டன.

பிரதேச சபையின் தவிசாளர் எஸ். சர்வாணந்தன் மற்றும் முன்னாள் தவிசாளர் நாகமணி கதிரவேல் உறுப்பினர்களான எம் எஸ். ஜெளபர் மற்றும் எம்எம். சாஜித் ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஆற்றல் பேரவையின் ஏற்பாட்டில் சாதனைப் பெண்களுக்கு கௌரவம்










சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஆற்றல் பேரவையின் ஏற்பாட்டில் மகளீர் தின நிகழ்வு



நேற்று முன்தினம் மாலை ஆரையம்பதி சிறுவர் விளையாட்டு பூங்கா வளாகத்தில் நடைபெற்றது.

ஆரையம்பதி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து கிராமங்களில் உள்ள மகளிர்களை இணைத்து இந்த நிகழ்வு நடைபெற்றது.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் அதிதிகளின் உரைகள் நடைபெற்றதனைத் தொடர்ந்து சாதனை பெண்களாக தெரிவுசெய்யப்பட்ட ஆரையம்பதியை சேர்ந்த அசோகராசா கௌரி, கிரான்குளத்தை சேர்ந்த கந்தசாமி கண்ணகை, புதுக்குடியிருப்பை சேர்ந்த பாக்கியராசா அழகம்மா மற்றும் மாவிலங்கத்துறையைச் சேர்ந்த மங்கலம் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து பிரதம அதிதிகளாக கலந்து கொண்ட மண்முனைபற்று பிரதேச செயலாளர் திருமதி ந.சத்தியானந்தி, சிரேஷ்ட சட்டத்தரணி மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு இணைத்தலைவரின் இணைப்புச் செயலாளருமான திருமதி. மங்களேஸ்வரி சங்கர் மற்றும் மட்டக்களப்பு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி. சுஜாத்தா குலேந்திரகுமார் ஆகியோர்களுக்கு நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக ஆரையம்பதி பிரதேச சபை தவிசாளர் தயானந்தன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களான தினேஷ், கந்தசாமி மற்றும் சுந்தராம்பாள் ஆகியோர் கலந்து கொண்டதுடன் கிராம உத்தியோகத்தர்களான ர.புவலெட்சுமி, வி.மனோஜா, க.அபிஷேகா, நி.மிருஜினி, கி.தயனி மற்றும் அ.சுகன்யா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மது போதையில் செய்த விளையாட்டு

# காயங்களுடன் சுயநினைவற்ற நிலையில் மீட்கப்பட்ட இளைஞன்



(க.கிஷாந்தன்)

கொத்மலை ரம்பொட ஆற்றுக்கு அருகில் இருந்து 32 வயதான இளைஞன் ஒருவரை விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் மீட்டுள்ளதாக கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் பகுதியில் இருந்து சிவனோளிபாதமலைக்கு யாத்திரை சென்ற இளைஞனே இவ்வாறு மயக்கமான நிலையில் ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் தனது 7 நண்பர்கள் சகிதம் சிவனொளிபாதமலைக்கு சென்று சனிக்கிழமை திரும்பியுள்ளார்.

இவ்வாறு திரும்பிய அவர் கொத்மலை ரம்பொடை ஆற்றுப்பகுதியிலுள்ள விடுதியொன்றில் தங்கி நேற்றிரவு மதுபானம் அருந்தியுள்ளனர்.

மது அருந்திய நிலையில் அதிக போதை காரணமாக அவர் கொத்மலை ரம்பொட ஆற்றிற்கு அருகில் உள்ள காட்டுப்பகுதியில் தவறி விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு விழுந்த இளைஞன் தேடப்பட்டு வந்த நிலையில் இன்று (14) காலை 10 மணியளவில் அவர் மயக்கமான நிலையில் மீட்கப்பட்டுள்ளார். அவரின் உடலில் காயங்கள் காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

காயங்களுடன் சுயநினைவற்ற நிலையில் மீட்ட இளைஞன் கொத்மலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதாக கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

# திருகோணமலை மாவட்ட செயலக உதவி அரசாங்க அதிபர் பிரதீபனுக்கு பாராட்டு விழா



(பொன்ஆனந்தம்)

நாம் வழங்கும் உதவித்திட்டங்கள் மக்களின் நிலைபேறான அபபிவிருத்திக்குதவ வேண்டும். நாம் எதை வழங்கினோம் என்பதை விட அதனால் அவர்கள் எதை அடைந்துள்ளனர் என்பதை கவனிக்கவேண்டும் என உதவிமாவட்ட செயலாளர் ந. பிரதீபன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் உதவி அரசாங்க அதிபராக பணியாற்றிய ந. பிரதீபன் தனது பணியில் இருந்து சொந்த தேவைகருதி விலகிஅமெரிக்கா செல்வதனையிட்டு அரசார நிறுவனங்கள் ஏற்பாடு செய்த பாராட்டு நிகழ்வு திருகோணமலை மாவட்ட சர்வோதயம் நிலயத்தில் அரசாரா நிறுவனங்களின் இணையத்தலைவர் டாக்டர் க. ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது அவரது சேவையை பலரும் பாராட்டி உரையாற்றினர்.

இங்கு பலவுரையாற்றிய உதவி மாவட்ட செயலாளர் ந. பிரதீபன், குறிப்பிடுகையில், இங்கு பலரும் என்னை பாராட்டினீர்கள். நான் எனது கடமையையே செய்தேன். நீங்கள் அனைவரும் மக்கள் பணிக்காக எனக்கு சிறந்த பங்களிப்பை வழங்கினீர்கள்.

அவ்வாறே நீங்கள் தொடர்ந்து இம் மாவட்ட மக்களுக்காக பணியாற்ற வேண்டும். எமது மாவட் ட சமூக சேவை அதிகாரி. திருமதி. சுகந்தினி மற்றும் இணைப்பாளர் உள்ளிட்ட வர்கள் உங்களுக்குதவுவார்கள்.

நாம் பாமர மக்களது முன்னேற்றம் கருதி பணியாற்றுகின்றோம். அவர்களுக்கு எதை வழங்குகின்றோம் என்பதை விட அவர்கள் எமது உதவியால் எதை அடைகிறார்கள் என்பது மிகவும் முக்கியமாகும். அதனையே எனது சேவைக்காலத்தில் நான் உங்களது திட்டங்களில் இருந்து எதிர்பார்த்தேன். பல திட்டங்கள் மக்களை சென்றடைவிதில் தோல்வி கண்டுள்ளன. அகவே நமது பணிகள் மக்களிளை அடுத்தகட்டத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.









இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் அனுசரணையில் 2021 ஆண்டு மார்ச் மாதத்திற்கான வேலைத்திட்டங்களில் முதற் கட்டமாக முதலாவது ஞாயிற்றுக்கிழமை அட்டனில் அமைந்துள்ள சிறுவர் இல்லத்திற்குத் தேவையான உதவிகள் வழங்கப்பட்டன. இரண்டாம் கட்டமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இறக்குவானை ஹெதர்லி தோட்டத்தில் அமைந்துள்ள சாந்தி சிறுவர் இல்லத்தில் வசிக்கும் சிறுமிகளுக்கான பாடசாலைச் சீருடைகள் விளையாட்டுப் பயிற்சிக்கான ஆடைகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டதுடன் தலைமைத்துப் பயிற்சியும் வழங்கப்பட்டது. சமயத் தலைவர்களின் ஆசியுரைகளுடன் ஆரம்பித்த இந்நிகழ்ச்சிகள் உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் மற்றும் நிருவாகக் குழுவினரின் வழிகாட்டலுடன் சிறப்பாக இடம் பெற்றன.

இதனைத் தொடர்ந்து இறக்குவானை நகர அறநெறிப் பாடசாலைக்கு புத்தக அலுமாரி அன்பளிப்புச் செய்யப்பட்டது. அத்தோடு முதியோர் இல்லத்திற்கான ஆடைகளும் பகிர்ந்தளிக்கப்பட்டன. இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் ஆடைத் தொழிற்சாலைக்கு மேலும் மூன்று தையல் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



# கூட்டு ஒப்பந்தம் இனிமேல் முத்தரப்பு ஒப்பந்தமாக இருக்க வேண்டும்

## எம்.பி. இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

கூட்டு ஒப்பந்தம் இனிமேல் முத்தரப்பு ஒப்பந்தமாக இருக்க வேண்டும் என மலையக மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் சர்வதேச மகளிர் தின நிகழ்வு ஞாயிற்றுக்கிழமையன்று அட்டனில் நடைபெற்றது.

பிரதம பேச்சாளராக சிரேஸ்ட விரிவுரையாளரும் மனித உரிமை மற்றும் பால்நிலை செயற்பாட்டாளருமான திருமதி. சோபனா ராஜேந்திரன் கலந்து சிறப்பித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் மகளிர் தின விழா அட்டன் மலையக மக்கள் முன்னணியின் தலைமைக்காரியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இதற்கான ஏற்பாடுகளை மலையக மக்கள் முன்னணியின் மகளிர் அணியினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த நிகழ்வில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன், செயலாளர் நாயகமும் பேராசிரியருமான சங்கரன் விஜயசந்திரன், மகளிர் முன்னணியின் உப தலைவி திருமதி சுவர்ணலதா இளங்கோவன் மகளிர் முன்னணியின் பிரதி செயலாளர் கிருஸ்ணவேனி விஜயகுமார் தலைமைப் பேச்சாளராக பேராதெனிய பழ்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளரும் மனித உரிமை மற்றும் பால்நிலை செயற்பாட்டாளருமான திருமதி சோபனா ராஜேந்திரன் முன்னணியின் பிரதி தலைவர் ஏ.லோரன்ஸ் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர்.ராஜாராம் மலையக தொழிலாளர் முன்னணியின் செயலாளர் கே.சுப்பிரமணியம் நிதிச் செயலாளர் விஸ்வநாதன் புஸ்பா உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் மலையக மகளிர் செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர்.



இதன்போது மலையக மக்கள் முன்னணின் ஆரம்ப கால உறுப்பினரும் முன்னணியின் கவுன்சில் உறுப்பினருமான அனைத்து சந்தர்ப்பத்திலும் துணிச்சலுடன் ஒரு பெண்ணாக செயற்பட்ட திருமதி கல்யாணி திலகேஸ்வரன் மற்றும் பேராதெனிய பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளரும் மனித உரிமை மற்றும் பால்நிலை செயற்பாட்டாளருமான திருமதி சோபனா ராஜேந்திரன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



இதில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனை கூறினார்.

மலையக மக்கள் முன்னணி அண்மைக்காலமாக பல துன்பங்களை சந்தித்து வருகின்றது. நான்கு பக்கங்களிலும் நெருக்கடி. குறிப்பாக அனுசா சந்திரசேகரனின் விலகல் மற்றது அரவிந்தகுமாரின் செயற்பாடு, தமிழ் முற்போக்கி கூட்டணியின் அழுத்தம் அத்துடன் எதிர்க் கட்சியில் இருக்க வேண்டிய நிலை. ஏன்பன முக்கியமானவை. இவற்றுக்கு மத்தியிலேயே பொதுச் செயலாளராக பேராசிரியர் விஜேசந்திரன் செயற்படுகின்றார். அனைத்தும் இறுகியுள்ளது. ஆகவே அங்கத்தவர்களின் ஒற்றுமயே இதிலிருந்து மீள ஒரே வழியாகும். 2025 ஆம் ஆண்டு நுவரெலியா மாவட்டத்தை ஆளக்கூடிய வகையில் மலையக மக்கள் முன்னணி உருவாகும்.

கூட்டு ஒப்பந்தம் இனிமேல் முத்தரப்பு ஒப்பந்தமாக இருக்க வேண்டும். ஏனெனில் மலைக மக்களின் பிரச்சினை இதன்போது அரசாங்கத்திற்கு தெளிவுப்படுத்தப்படும். தற்போது கூட்டு ஒப்பந்தத்தில் தொழிற்சங்கங்களும், கம்பனிகளும் அகைச்சராத்திடுகின்றன. எனவே மூன்றாவது தரப்பாக அரசாங்கத்தையும் இணைத்துக்கொள்ள வேண்டும்.

## ஆலையடிவேம்பில் கால்நடைகளின் தங்குமிடமாக மாறிவரும் பிரதான வீதிகள்



(வி.சுகிர்தகுமார்)

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் கால்நடைகளின் தங்குமிடமாக மாறி வரும் பிரதான வீதிகளினால் பல்வேறு அசௌகரியங்களை பொதுமக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனால் நாளாந்தம் பல்வேறு விபத்துக்களை பொதுமக்கள் எதிர்கொண்டு வருவதுடன் வீதிகளும் அசுத்தமாக மாறிவருவதனை காண முடிகின்றது.

இரவுவேளை மாத்திரமன்றி பகல் நேரத்திலும் அதிகளவான கால்நடைகள் வீதிகளில் அலைந்து திரிவதை அவதானிக்க முடிகின்றது.

ஆயினும் இதுவரையில் இது தொடர்பாக சம்மந்தப்பட்ட அலுவலகங்களோ அல்லது அதிகாரிகளோ பாதுகாப்பு தரப்பினரோ நடவடிக்கை எடுக்காமல் உள்ளமையும் கவலை அளிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் இதனால் ஏற்படப்போகும் விபத்துக்களில் உயிரிழப்புக்கள் ஏற்படுவதை யாராலும் தடுக்க முடியாத நிலை உருவாகிவருவதையும் சுட்டிக்காட்ட முடிகின்றது.

ஆகவே இது தொடர்பில் சம்மந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பதுடன் கால்நடை உர்ணீமையாளர்களும் பொறுப்புடன் செயற்படுவது காலத்தின் கட்டாயம் என்பது குறிப்பிடத்தக்கது.

## அகரம் கல்வி நிலையத்தின் இல்ல விளையாட்டுப் போட்டி



(ந.குகதர்சன்)

நாட்டில் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் வழிகாட்டலில் நாடளாவிய ரீதியில் பல்வேறு வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றது.

அதற்கமைய கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் செம்மண்ணோடை கிராமத்தில் சமூக சேவை நோக்கில் இயங்கும் அகரம் கல்வி நிலையத்தின் இல்ல விளையாட்டுப் போட்டிகளின் இறுதி நாள் நிகழ்வுகள் செம்மண்ணோடை அல் ஹம்றா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

நிலையத்தின் பணிப்பாளரும் வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினருமான ஏ.எல்.ஏ. கபூர் தலைமையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் அதிதிகளாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி தனஞ்சயபெரமுன, கந்தளாய் கல்வி வலயத்தின் பிரதி கல்வி பணிப்பாளர் ஏ.ஜே. எம்.மர்சூக், கோறளைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் ரீ.நவநீதன், சமூக சேவையாளரும் வர்த்தகருமான எம்.ஏ. ஸலாஹதீன், அல்ஹம்ரா வித்தியாலய அதிபர் எம்.எல்.அன்ஸார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் முதலாம் இடத்தை வட்சப் இல்லமும் இரண்டாம் இடத்தை பேஸ்புக் இல்லமும் மூன்றாம் இடத்தை யூடிப் இல்லமும் பெற்றுக் கொண்டதுடன் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் அதிதிகளும் ஆசிரியர்களும் நினைவு சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதாக அகரம் கல்வி நிலையத்தின் பொது செயலாளர் எம்.வை.பயாஸ் தெரிவித்தார்.



## அம்பாறை மாவட்ட போதைப்பொருள் வியாபாரிகளுக்கு ஆப்பு

### ஹரீஸ் உள்ளிட பாராளுமன்ற உறுப்பினர்களிடம் ஜனாதிபதி உறுதி

(சர்ஜுன் லாபீர்)

இன்று எமது சமூகத்தில் அதிகமான தாக்கத்தினை ஏற்படுத்திக் கொண்டு இருக்கும் போதைவஸ்து பாவனையும் அதனை விற்பனை செய்பவர்களையும் பொதுமக்கள் முன்வந்து தகவல்களை தெரிவிக்க வேண்டும் என திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவருமான எச்.எம்.எம் ஹரீஸ் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்...

போதைவஸ்து வியாபாரமும் அதற்கு அடிபணிவர்களின் தொகையும் இன்று கூடிக் கொண்டு போகின்றது.

இது சம்மந்தமாக மாவட்டத்தின் பொறுப்பு வாய்ந்த மக்கள் பிரதிநிதி என்ற அடிப்படையில் அண்மைக்கால அம்பாறை மாவட்டத்தில் போதைபொருள் வியாபாரிகளின் ஊடுருவல் மிக தீவரமாக அதிகரித்துள்ளது. மொத்த மற்றும் சில்லரை வியாபாரிகள் என பெரிய ஒரு வலையமைப்பில் இந்த போதைப் பொருள் வியாபாரம் நடைபெற்று வருகின்றது.

இதனால் பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் என இளம் சந்ததியினரே அதற்கு அடிமையாகி அவர்களை அழிவுப் பாதைக்கு கொண்டு செல்லுகின்ற அளவுக்கு நிலை மோசமாக காணப்படுகின்றது.

இது சம்மந்தமாக நான் போதைப் பொருள் ஒழிப்பு பொலிஸ் பிரிவு, கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் அம்பரை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர், இராணுவத்தினர் என பல்வேறு பட்ட தரப்பினரோடு இதனை ஒழித்து சம்மந்தப்பட்டவர்களை கைது செய்வ வேண்டும் என்று நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசி வந்து இருக்கின்றேன்.

இருந்தும் இந்த போதை பொருள் தடுப்பு நடவடிக்கை திருப்தியான முறையில் நடைபெறவில்லை என்பது எங்களுக்கு கவலையான விடயமாக இருந்து வருகின்றது. இது சம்மந்தமாக நான் கடந்த 11 ஆம் திகதி வியாழக்கிழமை ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ எங்களது பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து பேசுகின்ற போது அவரிடமும் அம்பாறை மாவட்டத்தில் போதைபொருள் விற்பனை மற்றும் பாவனையாளர்களின் தன்மை கட்டுகடங்காமல் தலைவிரித்து ஆடுகின்றது என்கின்ற விடயத்தை எடுத்து கூறி அம்பாறை மாவட்டத்தில் அதனை கட்டுப்படுத்துகின்ற தன்மை வெற்றிகரமாக நிறைவேற்றப்படவில்லை என்பதோடு நாட்டின் ஏனைய பகுதிகளில் அதனை கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கைகளை இங்கும் எடுக்க வேண்டும் என்கின்ற விடயத்தை தெளிவாக எடுத்து கூறினோம்.

இதற்காக கொழும்பில் இருந்து ஒரு குழுவினை அம்பாறை மாவட்டத்திற்கு அனுப்புவதாகவும் மற்றும் போதைப் பொருள் மொத்த சில்லறை விற்பனையாளர்கள், பாவனையாளர்கள் ஆகியோர்களின் தவல்களை பெறுவதற்காக இராணுவம் மற்றும் பொலிஸ் புலன்னாய்வு பிரிவுக்கு இன்றே உத்தரவு பிறப்பிப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இது சம்மந்தமாக பொதுமக்களை தகவல்களை வழங்குவதற்கு மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் நீங்கள் பகிரங்கமாக வேண்டுகோள் விடுங்கள் போதைபொருள் வியாபாரிகள் மற்றும் பாவனையாளர்களின் தகவல்களை வழங்குகின்ற பொதுமக்களின் தகவல்கள் இரகசியமான முறையில் பாதுக்காக்கப்படும் என்றும் அதே நேரம் சம்மந்தப்படவர்கள் எந்தவொரு பாகுபாடும் இன்றி கைது செய்யப்பட்டு தண்டிக்கப்படுவார்கள். என்பதனை ஜனாதிபதி உறுதியாக குறிப்பிட்டார்.

இதுவிடயமாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பாராளுமன்ற உறுபினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஏனையவர்களோடு நான் பேச இருக்கின்றேன் அவர்களின் ஒத்



துழைப்புகளோடு

எந்தவொரு எதிர்ப்புக்கள் வந்தாலும் அத்தனையும் தகர்தெரிந்து முழுமையாக இந்த விடயத்தில் நாங்கள் கூடிய கவனம் செலுத்தி எமது இளம் சமூகத்தினரையும் மக்களையும் பாதுகாப்பதற்கு முழு மூச்சாக செயற்படப்போவதாக குறிப்பிட்டார்.

எந்த காலகட்டத்தில் முஸ்லிம், தமிழ் சமூகங்கள் பெரும் நெருக்கடிக்களுக்கு முகம் கொடுத்து வாழ்ந்து கொண்டு வருகின்றது. எனவே எமது சமூகத்தினை ஒரு சில அற்ப ஆசைகாலுக்காக வழிக் காட்காமல் எமது சமூகங்களின் உயிர் நாடியாக இருக்கின்ற கல்வி, பொருளாதாரம் கலச்சாரம் ஏனைய விடயங்களை இதனூடாக சீரழுக்காமல் ஓர் உயரிய சமூகத்தினை கட்டியெழுப்புவதற்கு எல்லோம் ஒன்று பட வேண்டும்.

# “நடைபயிற்சியின் ஊடாக ஆரோக்கியம் பேணுவோம்” நிகழ்வு அக்கரைப்பற்றில் ஆரம்பம்!





(நூருள் ஹுதா உமர்)

The Walkers Union ஏற்பாட்டில் ”நடைப்பயிற்சியின் ஊடாக ஆரோக்கியம் பேணுவோம்” எனும் தொனிப்பொருளிலான வருடாந்த நிகழ்வுகளை அக்கரைப்பற்று மாநகர நீர்ப் பூங்காவில் நேற்று அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி தேசியக் கொடியேற்றி ஆரம்பித்து வைத்தார்.

இன்றைய நிகழ்வுகளில் 25 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கான 500 மீட்டர் சீரான ஓட்டப்போட்டியுடன், பெண்கள் மற்றும் சிரேஸ்ட பிரஜைகளுக்கான நடைப்போட்டிகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அக்கரைப்பற்று மாநகர நீர்ப்பூங்காவை தளமாக கொண்டு ஸ்தாபிக்கப்பட்ட வுாந றுயடமநசள ருெைழெ எனும் உடற்பயிற்சியினை ஊக்குவிக்கும் இவ் உன்னதக் குழுமத்தின் ஆரோக்கிய விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மாநகர முதல்வர் பாராட்டிக் கௌரவித்தமை விசேட அம்சமாகும்.

# சுரேன் ராகவன் எம்.பி. - சு.க. அங்கத்தவர்கள் சந்திப்பு



(ச.தவசீலன்)

பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் அவர்களுக்கு புதுக்குடியிருப்பு, ஒட்டிசுட்டான் பிரதேசங்களின் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அங்கத்தவர்களுகளுக்கும் இடைபிலான சந்திப்பு நேற்று முற்பகல் புதுக்குடியிருப்பில் இடம்பெற்றது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பிரதேச மட்டங்களிலும் கட்சி ரீதியிலும் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும், ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொண்டு கட்சி என்ற ரீதியில் முன்னோக்கி செல்லலாமென்றும் மக்களுடைய பிரச்சினைகளையும் தீர்க்கலாமென்றும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

# பயிற்சிப் பட்டறையில் வளவாளராக சுரேன் ராகவன் எம்.பி.



(ச.தவசீலன்)

புதுக்குடியிருப்பு இளைஞர் கழகங்களின் சம்மேளனம், உடையார்கட்டு மூங்கிலாறில் அமைந்துள்ள சம்மேளன மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த Y2K இளைஞர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிப் பட்டறையில் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் அவர்கள் வளவாளராக கலந்துகொண்டார்.

சமூகத்தை வாழிகாட்டும் நாளைய தலைவர்களாக மாறவுள்ள லு2மு இளையோர்களுக்கு இவ்வாறானதொரு தலைமைத்துவப் பயிற்சி அவசியம் தொடர்பில் குறிப்பிட்ட கலாநிதி சுரேன் ராகவன் அவர்கள், இவ் இளையோர் தம்மத்தியில் காணப்படும் பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புக்கள் தொடர்பில் அறிந்துகொண்டு அதற்கேற்ற முறையில் எவ்வாறு முன்னகரலாம் என்பது தொடர்பிலும் இதன்போது தெரிவித்தார்.

# தம்பிலுவில் முனையூர் படபத்திர காளி அம்மன் ஆலய மகா கும்பாபிசேஷம்



(எஸ்.கார்த்திகேசு)

கிழக்கிலங்கை வரலாற்று சிறப்புமிக்க தம்பிலுவில் முனையூர் படபத்திரகாளி அம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிசேஷகம் சிறப்பாக எதிரிவரும் வியாழக்கிழமை (18) காலை சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்ப வேதாகம கிரியைகள் மங்கள வாத்தியங்கள் முளங்க சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றி மகா கும்பாபிஷேக விழா இடம்பெறவுள்ளன.

ஆலயத்தில் இவ் கும்பாபிசேஷக கிரிமைகள் பிரதிஷ்டா பிரதமகுரு காளிபூஜா துரந்தரர் விஸ்வப் பிரம்மஸ்ரீ செ.சற்குணராஜா தலைமையிலான குருமார்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் ஆலயத்தில் கும்பாபிஷேக ஆரம்ப கிரிமைகளை ஆரம்பித்துள்ளனர்

இவ் கிரிமைகளைத் தொடர்ந்து மூலமூர்த்தி உற்பட அனைத்து பரிபாலன மூர்த்திகளுக்கு செவ்வாய் மற்றும் புதன் ஆகிய இரு தினங்கள் அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதனைத் தொடர்ந்து வியாழக்கிமை(18) காலை 10.00 மணி தொடக்கம் 11.00 வரையான சுபவேளையில் மூலமூர்த்தியான படபத்திர காளியம்மாள் உற்பட அனைத்து பரிபாலன தெய்வங்களுக்குமான மகா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளன.

ஆலய கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்த வெள்ளிக்கிழமை (19) திகதி முதல் எதிர்வரும் வைகாசி மாதம் 05ம் திகதி வரையான 48 தினங்கள் மண்டலாபிஷேகக் கிரியைகள் மற்றும் பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

இவ் கும்பாபிஷேக காலங்களில் ஆலயத்திற்கு வருகைதரும் பக்தர்கள் கொவிட் 19 சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி வருமாறும் ஆலய நிருவாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# திருக்கோவில் பிரதேசசெயலக நிருவாக உத்தியோகத்தருக்கு சேவைநலன் பாராட்டுவிழா!



( வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேசசெயலக நிருவாக உத்தியோகத்தர் திருமதி ஜெயசுந்தரி கணேசராஜா தனது 32வருடகால அரசசேவையிலிருந்து ஓய்வுபெறுவதையிட்டு, சேவைநலன்பாராட்டுவிழா நடாத்தப்பட்டது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் பிரதேசசெயலகத்தில் நடைபெற்ற இவ்விழாவில், உதவிபிரதேச செயலாளர் கந்தவனம் சதிசேகரன் உள்ளிட்ட சகல உத்தியோகத்தர்களும் கலந்து வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

கொழும்பு ,காரைதீவு, சாய்ந்தமருது, சம்மாந்துறை என பலபிரதேச செயலகங்களில் சேவையாற்றிய திருமதி ஜெயசுந்தரி கணேசராஜா, முகாமைத்துவசேவையின் சுப்பறா பரீட்சையில் சித்திபெற்றதன் காரணமாக பதவியர்வு பெற்று, திருக்கோவில் பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தராக கடமையாற்றினார்.

காரைதீவைச்சேர்ந்த இவரது 32வருடகால அரசசேவையைப்பாராட்டி பலரும் உரையாற்றினார். அவரது அர்ப்பணிப்பான அன்பான கடமையை நினைவுகூர்ந்து பொன்னாடைபோர்த்தப்பட்டு, வாழ்த்துமடல் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இணைந்து பணியாற்றிய செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் செல்வி. எம்.அனோஜா கிராமசேவைநிருவாக உத்தியோகத்தர். திருமதி எஸ்.பரிமளவாணி உள்ளிட்ட பலரும் கருத்துரைத்தனர்.

# 40வருடங்களின் பின்னர் கல்வி நடவடிக்கைகளில் மறுசீரமைப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

கல்வி நடவடிக்கைகளை மறுசீரமைப்பதற்கான டிஜிட்டல் தள நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதுதொடர்பான நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

1970ஆம் ஆண்டிற்குப் பின்னர் நாட்டின் கல்வி கட்டமைப்பு மறுசீரமைக்கப்படவில்லை. பாடத்திட்டங்கள் புதுப்பிக்கப்படுவது மாத்திரமன்றி, சிறப்பான கல்வியை மாணவர்களுக்கு பெற்றுக் கொடுப்பது அரசாங்கத்தின் நோக்கமாகும் என்று அவர் தெரிவித்தார்.



புத்திஜீவிகள், மதகுருமார்கள், பல்கலைக்கழகம் மற்றும் பாடசாலை சமூகம், பொதுமக்கள், ஊடகவியலாளர் உள்ளிட்ட சகலரது ஆலோசனைகளும் இதற்காக பெறப்படவுள்ளன. இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.